LIBRARY
2-10-1995
UNIVERSITY OF JAFFNA

Registered at the G. P. O. AS A NEWSPAPER

ஸன்மார்க்கபோதினி.

SANMARKA POTHINI

பத்திர விலைவிகிதம்
வருஷக்கு ரூபா ௧-௫0
தபாற் செலவு
இலங்கைக்கு சதம் ௫0
இந்தியாவுக்கு சதம் ௫
பிறதேசங்களுக்கு ௭௫

விளம்பரவிலைவிகிதம்
வரி ஒன்றுக்குச் சதம் 1
௧0 க்குமேல்ஒருவரிக்கு 9
௨0 க்கு மேல்..............8
ஆனைப்பிரசுரமொவ்வொன்றிற்கும்௫-ல் ஒன்று

ஒன்றுவிட்டொருசெவ்வாய்க்கிழமைகளிற்
பிரசுரஞ்செய்யப்படும்

சாதுசங்கஞ் சன்மார்க்க சாதனம்.

Published on every
other Tuesday

VOL. XXXII. JAFFNA July 12th 1916 No 14

௧௨ம் புத்தகம் யாழ்ப்பாணம் ௧௯௧௬ம் ஹு ஆடிமீ ௧௨உ செவ்வாய்க்கிழமை சங்கியை ௧௪

சுந்தரன் செய்த தந்திரம்.

(13ம் இலக்கப் பத்திரத்தொடர்ச்சி)

குருமூர்த்திச்செட்டி பேசாமலிருந்து தனது பூதத்துக்கெட்டாதவகையாய்க் காரியம் நடைபெறுவதைக்கண்டு இன்றைக்கும் பரீட்சிக்கத்தகுந்த காளாய்க் காணப்படவில்லை. இன்னொருமுறை பார்ப்போமென்று கூட்டாளிகளையும் அழைத்துக்கொண்டு வீட்டைநாடிப்போய்விட்டான். சுந்தரனும் அன்று தன்கருமத்தைமுடித்து யாவரும் போனபின் காளிமுத்துவை அழைத்து இன்றுநடந்த கருமமெப்படி? சனங்கள் என்னபேசிக்கொண்டார்களென்று கேட்டான். காளிமுத்து உத்தரமாக அராலியிலிருந்துவந்த சிலர் சாஸ்திரங்கேட்பது இன்னொருமுறைக்கென்று போய்விட்டார்கள். அவர்கள் இரகசியமாய் வெகுநேரம் யோசனைசெய்துகொண்டிருந்தார்கள். "அகத்தினழகு முகத்திற்றெரியும்" என்பதுபோல அவர்கள் திகிலடைந்தவர்களாய் நீர் கீர்த்தியடைவதில் வெறுப்புற்றவர்கள்போற் காணப்பட்டார்கள். மற்றவர்களோ இது மனுஷயுத்திக் கடங்காச்செயல். உண்மைப்படியே எல்லாம் சொல்லிவிட்டார் என்று ஆச்சரியத்துடன் நீர்கொடுத்த ஓலைகளுக்குள்ளே வாசித்துக்கொண்டேபோனார்கள். அதனால் மற்றச் செவ்வாய்க்கிழமை எண்ணற்ற சனங்கள் வருமென்பது எனது உத்தேசம் என்றான். அதைக்கேட்ட சுந்தரன் சற்றேயோசித்தபின் அராலியால் வந்தவருள் முதல்வன் ஆர், அவன்பெயர் என்னவென்றுகேட்டான். அவனைச் செட்டியார் என்றே மற்றவர்கள் கூப்பிடுகிறார்கள். மறுநாமந் தெரியாதென்றான். அவனை நமது சத்துருவென்றே எண்ணவேண்டும். அடுத்தகிழமை சுப்புவையும் கயிலாயரையுங் கூட்டிவந்து அவன் பேரூர் செய்கையெல்லாம் சுப்புமூலமாக விசாரிக்கவேண்டும். அவன்வந்தால் துண்டெடுக்கும்படி கட்டாயப்படுத்தவேண்டும். எடாவிட்டால் அங்கிருக்கவேண்டாமென்று அதட்டிவிடவேண்டும். துண்டெடுத்தால் அவனுக்குக் கொடுக்குந் துண்டு வட்டமாய் ஈரத்தமும் வெட்டப்பட்டிருக்கவேண்டும். அவன்காமந்தெரியுமானால் முந்தக கயிலாயருக்கு ஒருதுண்டு கொடுத்து அவன்சங்கதிகளையும் எழுதியனுப்பிவிடுஎன்றுகற்பித்தான். அதற்குச் சம்மதித்துக் காளிமுத்து வீட்டுக்குப்போய்விட்டான். சுந்தரனும் அராலிச்செட்டியை அமுக்கும்வழியை யோசித்துக்கொண்டேயிருந்தான். "பதறுதகாரியம் சிதறுது" ஆகலால் அமைதியாய்த் திடமனதாயிருந்து கருமத்தை நடத்துவோமென்று தீர்மானித்துக்கொண்டான். அடுத்த செவ்வாய்க்கிழமை காளிமுத்து சுப்புவையுங் கயிலாயரையுங் கூட்டிக்கொண்டு தலைவாயிலில் வந்துசேர்ந்து அவர்களிருவருஞ் செய்யவேண்டிய உபாயமின்னதென்று போதித்துக்கொண்டிருந்தான். அத்தருணம் சிலர் வந்துவிட்டனர். அடுத்துக் குருமூர்த்திச்செட்டியுந் தனியேவந்தான். அவன் வரவைக்கண்ட காளிமுத்துக் கூட்டாளிகளுக்கு இவனே அவனென்று தெரிவித்துவிட்டான். அவன்வந்து சற்றுநேரத்தின்பின் முன்வந்தவர்களெல்லோருக்குந் துண்டுகொடுத்துமுடிவில் இவனையுந் துண்டெடுத்துக்கொள் என்று கேட்கப்பட்டது. அவனோ பிறகுபார்ப்போம் என்றான். அத்தருணங் காளிமுத்து நீ சென்றகிழமையுஞ் சிலகாவாளிகளுடன்வந்து வேலையில்லாமல் இருந்துவிட்டுத் துண்டெடாமற்போனாய்? உனக்குப் பயித்தியமோ? துண்டெடாவிடில் இங்கே இருக்கப்படாது போய்விடலாமென்றான். அதற்குச் செட்டி அவ்வளவு அதிகாரமோ இராசரிகமும் உன்னுடைதோ என்றான். அதற்குக் காளிமுத்து ஒருவரின் தலைவாயிலில் அவரனுமதியின்றி வரலாமோ? ஒரு பகிரங்கமான இடத்தில் கலகஞ்செய்யலாமோ? என்ன, குருமூர்த்திச்செட்டி நான் எல்லாரும்போலவே வந்திருக்கிறேன், சாஸ்திரங்கேட்கப்போகிறேன், பணம் இல்லாமையால் இருக்கிறேன். பின்னே வருகிறவர்கள் பணங்கொண்டுவருகிறார்கள். நீயென்ன சண்டப்பிரசண்டஞ் செய்கிறாய் என்று ஆர்ப்பரித்தான். அதற்குக் காளிமுத்து இவன் சென்றமுறையும் இப்படியேயிருந்து திண்ணை தூங்கிவிட்டுப் போனவன். இவன் பணமில்லாமல் வரவேண்டியதென்ன? சுப்பு இங்கேவா கூட்டிவா ஆராய்ச்சியாரை என்றான். அதைக்கேட்ட சுப்பு குருமூர்த்தியைநோக்கி ஓய இங்கேவாரும், உமது பேரென்ன என்றான். அதற்கு என்பெயர் குருமூர்த்திச்செட்டி என்றான். உமது ஊரென்ன என்றான். அராலியென்றான். ஓகே! நீர் பசுபதிச்செட்டியாருக்கு இனமோ என்றான. ஆமாம், அவர் என் அக்காபுருஷன்தானே என்றான். அப்படியா நீர் மரியாதையான குலத்தவரல்லவா? என்று [illegible] காளிமுத்து நீ வீண்வாதஞ் செய்யாதே! பேசாதிரு என்று சொல்லிவிட்டுக் குருமூர்த்திச்செட்டியைநோக்கி நீர் முறைப்படி ஒரு துண்டெடுத்துக்கொள்ளுமென அவனும் இசைந்து துண்டெடுத்துக்கொண்டான். இச்சங்கதியை ஒரு துண்டிற்குறித்து அடுத்திருந்த கயிலாயர்கைக்குள் மறைவாய்வைத்துவிட்டு இருவருக்குமுன்னே கயிலாயரை அனுப்பிவிட்டான். கயிலாயர் போய்வந்து சாஸ்திரியாரைப் புகழ்ந்துகொண்டு தம்பாட்டில் செல்வதுபோல நடித்தான். அடுத்ததாக குருமூர்த்திச்செட்டி போகவே சுந்தரன் அவனைவிழித்து நீ முன்னொருமுறை என்னைப் பரீட்சிக்கவந்தாயல்லவா! இப்போதும் என்னைப் பரீட்சிக்கவல்லவா வந்தாய்? என்னைப் பரீட்சிக்க இந்திராதிதேவராலுமியலுமா? "நரிவால்கொண்டு கிணறாழம்பார்க்கலாமா"? "நண்டுகொளுத்தால் வளையிலிராது" என்றபடி உன்பாட்டில் உன்கருமத்தைப் பாராமல் என்னைப் பரீட்சிக்கவா துணிந்தாய்? நல்லது! நல்லது!! "ஆத்தையறியாததும் உண்டோ" என்று மருத்துவிச்சிமகன் சொன்னதுபோல என்னையறியாத உள்ளமுமுண்டா? உன்பெயர் குருமூர்த்திச்செட்டியல்லவா? நீ எல்லாமறிந்தவனென்று கீர்த்தியடையவன்றோ திரிகிறாய்? அதைவிட்டு உனக்கு ஒருமாசத்துள் ஒரு ஆபத்துவரப்போகிறது அதைப்போய்ப் பாரென்று ஆக்கிரமித்தான். செட்டியோ கைகால் உதறலெடுத்து வந்தவழியேதிரும்பித் தலைவாயிலிலிருந்தவர்களையுந் திரும்பிப்பாராமல் சென்றான். [வரும்]

கையொப்பவரவு.
தொண்டமானாறு
P. J. Rajah Esq.
Storekeeper 3_00

யாழ்ப்பாணம்.

வானச்சீர்—காற்றமைதி. மழையில்லை. மழைக்கோலமுண்டு. சின்னமுத்து ரோகத்தால் பல சிறுவர் மாளுகின்றனர்.

விவாகம்— சென்ற 28உ புதன்கிழமை சாயந்தரம் மானிப்பாய் ம ா ா ஸ்ரீ உவில்லியம் மேதரவர்கள் புத்திரன் ம ா ா ஸ்ரீ அல்பிறற் மேதர் அவர்களுக்கும் அராலி டக்டர் ரத்தினம் அவர்களின் சிரேஷ்டபுத்திரி ஸ்ரீமதி அலிஸ் ருக்குமணி அம்மாளுக்கும் வட்டுக்கோட்டைத் தேவாலயத்தில் சுபபந்தன விவாகச்சடங்கு விமரிசையாய் நடந்தேறிற்று. திரளான சுற்றமித்திரர் சமூகந்தந்தனர். பின்னர் வாத்திய கோஷத்துடன் மணமகள் வீடுசென்று உபசரிக்கப்பட்டபின் மணமகன் இல்லத்திற்குத் திரும்பினர். ஈரிடங்களிலும் தக்க உபசாரணைகள் நடந்தன. இப் புதியகுடும்பம் தேவாசீர்வாதம்பெற்றுச் சிறந்து வாழும்படி திருவருட் கிருபையை வேண்டுகின்றோம்.

சுப்பிரீங்கோடு—யாழ்ப்பாணக் கிறிமினல்விசாரணைச் சுப்பிரீங்கோடு நேற்று ஆரம்பமாயிற்று. சிரேஷ்டநீதிபதியே சிம்மாசனம் ஏறினர். இம்முறை பாரப்படுத்தப்பட்ட வழக்குகள் ஏழு. இன்னும் இரண்டொன்று சேர்க்கப்படுமாம். முதல்முதல் புத்தூரில் பெண்சோர வழக்கு விளக்கத்தில் வந்தது. தீர்ப்பு இன்று சொல்லப்படும்.

வைசூரி—கொட்டடியில் சிலர்க்கு வைசூரிநோயுண்டாய் இரண்டு மூன்றுபேர் இறந்தனர்.

[illegible] சுழிபுரத்திலொருவனும் கொட்டடியிலொருவனும் கல்லெறியால் மாண்டனர்.

மடுத்திருநாள்—சென்ற 5உடன் மடுத்திருநாள் சமாப்தியாயிற்று. இம்முறை றெயில் மூலமாகப் பதினையாயிரம் பேர் சென்றார்களென்று தெரிகிறது. இதில் யாழ்ப்பாணத்திலிருந்து மூவாயிரம்பேரும் மன்னார்ப் பகுதியிலிருந்து இரண்டாயிரம் பேரும் போனார்களாம். மோற்றோர்க்கார் வண்டிகளும் 20 சென்றனவாம்.

நோய்தீர உபாயம்.

அநேக ரோகங்களுக்கு மூத்திர உப்பு விஷமே (யூரிக் ஆஸிட் பாய்ஸன்) காரணம். துர்ப்பலமாயும், ரோகம் முதிர்ந்தும் உள்ள மூத்திரப்பை தான் செய்யவேண்டியபடி செய்யாமல், ரத்தத்திலிருந்து மூத்திரத்தை வடிகட்டாதது ஆகிறது. உடம்பு முழுதும் சுகமாயிருக்கிறதற்கு முக்கியமான காரியம் மூத்திர விஷம் ரத்தத்திலிருந்து பிரிவதுதான்.

பலமில்லாமலும், ரோகம் நிறைந்தும் இருக்கிற மூத்திரப்பையின் லக்ஷணங் கேளுங்கள்:— முதுகுநோய், தூக்கம் பிடியாதிருத்தல், ஜலம் கொஞ்சமா யிறங்குவது, மூத்திரம் நிறமாறுதல், மூத்திரத்திலிருந்து புகை கிளம்புவது, எப்போதும் தாகம், ஆயாசம், பலவீனமான இருதயம், தலைநோவு; தைரியமில்லாமை, கண்பார்வையின் மந்தம், தலைச்சுற்று, மேல்களும், சந்துகளும் புண்ணாகி அசைக்க முடியாமற் போவது, மறதி, சாதாரண பலவீனம் முதலானவை. இந்த லக்ஷணங்கள் உண்டானபோது, அசட்டை செய்துவிட்டால், கீழே சொல்லும் ரோகங்கள் தப்பாமல் உண்டாகும். மூத்திர ரோகம், திமிர்வாயு, மகோதரம், [illegible] மூத்திர ரோகம் முதலானவைகளும், [illegible] மென்று தப்பாக எண்ணிக்கொள்ளும் ரோகங்களும். (டோண்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோண் அவர்களுடைய முதுகுநோய் [illegible] ரோகமாத்திரைகள், மூத்திரப்பையிலும், மூத்திர அவயவங்களிலும் புகுந்து, மூத்திர விஷத்தை ரத்தத்திலிருந்து பிரிக்கும். அது நடந்தால், சரீரசுகம் தப்பாமல உண்டாகும். சுகமாய் இருக்கவேண்டுமானால் மூத்திரப்பை ரோகமடையாமல் வைத்துக்கொள்ளவேண்டும். மூத்திரப்பையை ரோகமடையாமல் காத்துக்கொள்வதற்கு ஏற்ற மருந்து (டோன்ஸ் பாக்-ஏக் கிட்னி பில்ஸ்) டோன் அவர்களுடைய முதுகு நோய் மூத்திரப்பை ரோகமாத்திரைகளே.



ஒரு புட்டி விலை, ரூபா. 2 0 0
6 புட்டியின் விலை, ரூபா... . 10 8 0

இவை, சிமை மருந்து வியாபாரிகள் எல்லாரிடத்திலும், சென்னையில் ஏஜண்ட் ஆண்டப்பிலியு. ஏச். மல்லர் துரையவர்களிடத்திலும் கிடைக்கும்.

* * *

வீடெரிதல்—பெரியகடைக்குத்தெற்கே கிடுகால்வேய்ந்த சோற்றுக்கடையொன்றில் தீப்பற்றி அக்கடையும் அடுத்திருந்த வேறு மூன்றுகடைகளும் எரிந்தன. அன்று வைத்திலிங்கம் என்னும் கம்மாளனுடைய வீடும் தீக்கிரையாயிற்றும். நட்டம் ஆயிரம் ரூபாவரையிலுண்டாம்.

இலங்கை.

மறியற்காரரின்விடுதலை—கலகஞ்செய்தார்களென்று இராணுவக்கோட்டாரால் தீர்ப்பிடப்பட்ட வேறு மூவரையும் நமதுதேசாதிபதியவர்கள் விடுதலைசெய்தார்.

பிளேக்குநோய்—ஆனிமீ 22ந்திகதிக்கும் 24ந் திகதிக்குமிடையில் கொழும்பில் 6 பேர் பிளேக்குநோயாலிறந்தனர். 26உ 2 பேர் இறந்தனர். 28உ 4 பேர் இறந்தனர். 29உ 5 பேரில் நோய்தோற்றிற்று.

புராதனப்புதையல்—அனுராசபுரத்தில் துவான்வெலிசாகோரியைப் பழுதுபார்க்கும்போது ஒரு கல்லினுக்குள்ளே பழைய நாணயங்களும் மோதிரங்களுங் கண்டெடுத்தார்களாம்.

யுத்த தந்தி.

பிரான்சுபெல்சிய செர்மனியயுத்தம்.

பிரித்தானியபோர்முனை.

26உ சேத்திரவுபலஇடங்களில் சத்துருக்களைத் தாக்கிச்சலபலனடைந்தோம். பத்திடங்களில் சத்துருஅரண்வரிசைகளைப்பிளந்து உட்புகுந்தோம் சத்துருக்களுக்கு அதிகசேதம் மன்ஸ்தர் மாகாணத்தைச்சேர்ந்த துப்பாக்கிப்படையும் நியூசிலந்து ஆஸ்திரேலிய சேனைகளும் நற்பலனடைந்தன சத்துருப்பாதுகாப்பு ஸ்தலங்களை நமதுபீரங்கிப்படை சேதமாக்கிவிட்டன.

27உ போர்சேல் என்னும் பிரான்சுக்கப்பல் மத்தியதரைக்கடலில் மூழ்கடிக்கப்பட்டது. ஆபிரிக்கவடபாகத்தில் அல்ஜியாவிலிருந்து பிரயாணமாய்வந்த வில்லிடிமாட்ரிட் என்னும் பிரயாணக்கப்பல்மேல் ஒருசப்மரீன் குண்டினை எறிந்து பின்தொடர்ந்தும் அது குறுக்கும்மறுக்குமாய் வேகமாய் விரைந்துசென்று தப்பிக்கொண்டது.

28உ ஹாஸ்என்னுமிடத்தில் சாக்கிச்சண்டை நடந்தது அதில்செர்மனியருக்கு மிகுசேதம்விளைத்தனர். சேற்றும்சத்துருவிமானம் கீழே வீழ்த்தப்பட்டன. ஒருபிரித்தானிய விமானங் காணப்படவில்லை. மூன்றுபிரான்சியவிமானங்கள் பெல்சியக்கடற்கரைக்கப்பால் சிலசெர்மனிய கப்பல்கள் மேல் 65 குண்டுகளையெறிந்தன.

சத்துருக்கள்மேல் பிரித்தானியர் விஷக்காற்றைப்பிரயோகித்து மிகுகஷ்டத்தைபுண்டாக்கினர் லபாஸிக்குப் போகுந்தெருவில் சத்துருக்களைத் தாக்கி 46 கைதிகளையும் 2 மெசின்பீரங்கிகளையும் 4 சுரங்கங்களையும் வெடிக்கச்செய்தனர்.

29உ சென்ற 24 மணிநேரத்தில் நமது வேலதியும்படையைச் சேர்ந்தவரில்பலரும் சத்துருக்களில்தாக்கிக்கொண்டிருந்தபலரும் பலசத்துருஅரண்களில் நுழைந்து அவர்களுக்கு மிகுசேதத்தைவிளைத்து அனேகங் கைதிகளையும் சாமான்களையும் பிடித்தனர் என்றுபிரித்தானியசெய்திகூறுகிறது.

சென்றஇருநிலவுகளாய் பிரித்தானியர் சத்துருஅரண்கள்மேல் அனேககுண்டுகளையெறிந்து புகைக்காடாக்கிவிட்டனர். நீப்பாலியில் மாத்திரம் அரைமணிநேரத்தில் 500குண்டுகளையெறிந்தனர் சத்துருக்கள் பதிலுக்குத்தாக்குவது சொற்பமாயிருந்தது.

ஆடிமீ 1உ நமதுபடைகள் பலசெர்மனிய அரணிற்புகுந்து சில கைதிகளைப்பிடித்தன நியூஷாபறுக்குத்தெற்கே ஒருபலத்தசேனை செர்மன்பாதுகாப்பு வரிசையைப்பிளந்துட்புகுந்தது காம்இரவில் ஆலிபாசி றோட்டுக்குத்தெற்கே ஒருசுரங்கத்தைவெடிக்கச்செய்து சத்துருக்களுக்கு அதிகசேதம்வருத்தி அப்பள்ளத்தை வசப்படுத்திமேலும்

சத்துருக்கள்கனத்தபீரங்கிகளால் தாக்கினமை எதிர்த்தும் பின்தள்ளப்பட்டார்கள் சத்துருக்கள்சிலஇடங்களில் சாக்குகளை வடிக்கச்செய்தும் சற்றும்பயனடையவில்லை நேற்றுகாலையிலைமையமாறு விருந்தும் ஓர்சத்துருவிமானம் கீழேவீழ்த்தப்பட்டது.

2வ ஆங்கர்க்கும் சோம்கோட்டேக்கும் மத்தியில் கனத்தபீரங்கிச்சண்டை நடக்கிறது நமதுபடை 7 மைல்நீளமும் 1000 யார்அகலமுமுள்ள போர்முனையில் செர்மனிய அரண்களை வசப்படுத்தி மாண்டாபேன் மாமெட்ஸ என்னுமிடங்களிலுள்ள அநேக இடங்களைத்தாக்கிப் பிடித்துக்கொண்டதோம் 4 மைல்விஸ்தாரமுள்ள போர்முனையில் சத்துருக்களைத்தாக்கினோம் அநேக ஸ்தலங்களைமாத்திரம் வசப்படுத்திக்கொண்டோம் சத்துருக்கள்மற்றஇடங்களில் பிடிவாதத்துடன் தம் ஸ்தலங்களைப்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆங்கர்க்குக்கும் சோம்கோட்டேக்கும்மத்தியில் முதல்நாம்பிடித்த ஸ்தலங்கள்சிலவற்றை எம்வசத்தில் வைத்திருப்பது கஷ்டமாயிருக்கிறது மற்றுஞ்சில ஸ்தலங்கள் நம்வசத்திலேயே இருக்கின்றன. இதுவரையில் இருபட்டாளத்தலைவரும் ஒரு பட்டாளமும் உட்பட 2000 செர்மனியகைதிகள் நமது ஸ்தலவழியாய்க் கொண்டுபோகப் பட்டார்கள், போர்முகத்தில் மாண்டுகாட்கும் செர்மனியரைப் பார்த்தால் அவர்களுக்கு விசேஷசேதமுண்டானதாகத்தெரிகிறது நமது ஆகாயப்படை நேற்றுப்பலத்தகாற்றடித்தும் சத்துருஅரண்கள் புகைரதப்பாதைமுதலியவைகள்மேல் அநேககுண்டுகளை எறிந்தன ஒருசிறிய ரெயில்வண்டியை வெடிக்கச்செய்தது வேறொன்று தீப்பற்றியெரியும்படிசெய்யப்பட்டது. பிரான்சரும்பிரித்தானியருடன் சேர்ந்து வேலைசெய்து 3500 கைதிகளைப்பிடித்துக்கொண்டார்கள். பிரான்சர் தீயாமாண்ட் என்னுமஸ்தலத்தைப் பிடித்துக்கொண்டார்கள்.

சோம்நதியின் தெற்குப்பக்கத்தில் டொம்பியாபெக்வின்கோர்ட், பலசபே, ஆகியகிராமங்களைப் பிரான்சர்பிடித்தனர் வியாழம்வெள்ளிக்கிழமைகளில் பிரான்சுவிமானங்கள் ராயி ஆகியஇடங்களில் குண்டெறிந்துபலன்பெற்றன சத்துருகூடாட்டங்களை ஓர்விமானி வேவுபார்த்து வரும்போது ஓர்பாக்கர்விமானம் அவரைத்தாக்கிக் காயமுண்டாக்கியது. ஆயினும் அப்பாக்கர் விமானத்தைக் கீழேவீழ்த்திவிட்டார். திரும்பிவரும்போது வேறோர்விமானத்தாற்றுக்குண்டு சேமமே வந்துசேர்ந்தார்.

3வ ஞாயிற்றுக்கிழமை ஆங்கர்நதிக்குப்சோம்நதிக்கும் மத்தியிலும் பிரிக்கோட் லபாய்செல்லைச் சுற்றியும் யுத்தம் நடந்துகொண்டிருந்தது முதல் ஸ்தலம் 2 மணிக்குப்பிடிக்கப்பட்டது அதற்குக் கிழக்கே சற்றுமுன்னேற்றமடைந்தோம் சத்துருக்கள் லாபாய்செல் ஸ்தலத்துக்குத் சுற்றுப்பக்கத்தில் ஒரேபிடிவாதமாய் நம்மைஎதிர்த்துப் பிடித்துக் கொண்டார்கள் ஆனால்நமது சேனைகள் திருத்தியாய் முன்னேறிக் கொண்டிருக்கின்றன திரளானயுத்தசாமான்கள் பிடிக்கப்பட்டன

ஆகாயவிமானங்கள் நேற்றுச்சோம்நதிக்கு வடக்கே பலசத்துரு ஸ்தலங்கள்மேல் பலகுண்டுகளை எறிந்தன நமதுவிமானங்களை 20 பாக்கர்விமானங்கள் தாக்கின ஆனால்அவைகள் அப்புறப்படுத்தப்பட்டன. நமதுவிமானங்களில் மூன்று காணப்படவில்லை நமதுபுகைக்குண்டுகள் நாள்முழுதும்ஆகாயத்தில்இருந்தன கர்லிவுக்குக் கிழக்கேயுள்ள ஒருஅரண்ஸ்தலத்தை நாம்பிடித்து இரண்டாவதுஅரண்வரிசையில்பலஇடங்களில்நாம்சிறிதைவசப்படுத்தினோம்பிரஸ்என்னும்கிராமத்தையும்மெரிக்கோட் என்னுமகிராமத்தையும் பிடித்தோம் 150 உத்தியோகஸ்தர்உட்பட 6000 காயப்படாதகைதிகள்நம்மிடமிருக்கிறார்கள் பீரங்கிகளையும் திரளான யுத்ததளபாடங்களையும் பிடித்துக்கொண்டோம்என்று அங்கிலோஅறிக்கைகூறுகிறது

2வ கார்டிகோட்டின் சுற்றுப்பக்கஎல்லையில் நமதுபுதிய ஸ்தலத்தைச்செர்மனியர் உக்கிரமாய்த் திருப்பியெதிர்த்தும் நமதுதுப்பாக்கிப் பிரயோகத்தினால் சேதமுற்று அப்புறப்படுத்தப்பட்டார்கள் பின்புகடினயுத்தஞ்செய்து கர்லு எனனும் கிராமத்தைப்பிடித்துக்கொண்டோம் நேற்றுப்பிரான்சர் பிடித்தகாயமற்றகைதிகள் 5000 பேருக்கு மேற்பட்டிருக்கிறார்கள்

3வ லாபாய் செல் என்னும் ஸ்தலத்தின்பாதுகாப்புப்படைகள் பணிந்துவிட்டன சத்துருப்பாதுகாப்புஸ்தலங்கள் வேறுசிலதையும்பிடித்தோம் லபாய் செல்லில் உக்கிரசண்டைநடக்கிறது காலையில் சத்துருப்பாதுகாப்பு ஸ்தலத்தில் ஒருபாகத்தைவசப்படுத்தினோம் இன்னும் 400 பேரைச் சிறைப்படுத்தினோம் நமது ஆகாயப்படை நேற்றுச் சுறுசுறுப்பாய்வேலைசெய்து காலையில்நமதரண்வரிசைக்கு மேல்திரிந்தசத்துரு ஆகாயப்படைக்கூட்டம் அப்புறப்படுத்தப்பட்டுச் செர்மனிய வரிசைக்குப்பின்னால்துரத்தப்பட்டன. நமதுவிமானங்கள் அவைகள்மேல் தடங்கலின்றிப் பீரங்கிப்பிரயோகஞ்செய்தன சத்துருவிமானங்களில் 11 கீழேவீழ்த்தப்பட்டன நமதுவிமானங்களில் 7 காணப்படவில்லை இதுவரைநாம் 4000 செர்மனியரைச் சிறைபிடித்தோம்

4வ இன்றுலாபாய்செல்லைச்சுற்றியும் திப்வாலுக்குத்தெற்கிலும் சண்டையின்பலாபலம் மாறிக்கொண்டிருந்தது என்றாலும் நமக்கனுகூலமாகவேயிருந்தது. சத்துருக்கள்திப்வால் ஸ்தலத்துக்குத் தெற்கே திருப்பிஎதிர்த்துக் காலையில் நாம்பிடித்த ஸ்தலத்தின் ஒருபாகத்திலிருந்து நமதுசேனைகளை அப்புறப்படுத்திவிட்டார்கள் மற்றிடங்களில் நாம் அவர்களைப் பின்தள்ளிவிட்டோம் ஏராளமான யுத்தாயுதங்களும் பொருட்களும் பிடிக்கப்பட்டன இப்போது நம்மிடம் 4300 பேருக்குமேலானகைதிகளிருக்கிறார்கள் இன்று ஓர் சத்துருப்புகைக்கூண்டைத்தீப்பற்றிக் கீழேவிழச்செய்தோம் இச்சண்டைஆரம்பித்ததுமுதல் பிரித்தானிய போர்முனையில 15 விமானங்களை இழந்தோமென்று பிரித்தானியசெய்திகூறுகிறது.

சத்துருக்கள் துணைப்படைபெற்றுப் பிடிவாதத்துடன் நம்மையெதிர்த்துக்கொண்டிருக்கிறார்கள் லாபாய்செல்லில் இரவில் நடந்த கடினயுத்தத்தில் சத்துருக்களின்தெற்கிலுள்ள பாதுகாப்புஸ்தலத்தின் மிகுதியபாகத்தைத் திரும்பப் பிடித்துக்கொண்டார்கள் நாம்ஒருகாடிட்டஇன்னும் சிலதைப்பிடித்துக்கொஞ்சயுத்தசாமான்களையும்கைப்பற்றினோம் ஆர்மாண்டிகக்கருகில்நம்மைத்தாக்கஎத்தனித்துக் காயமடைந்தவர்களில் அநேகரைவிட்டுப் போகும்படி பின்தள்ளப்பட்டார்கள் மழையால்யுத்தநடபடிக்கை தாமதப்பட்டிருக்கிறது இப்போது நம்மிடம் 5000 பேருக்குமேலான கைதிகளிருக்கிறார்கள்

5வ பிரிகோட்டேக்குச்சுற்றுப்பக்கத்தில் நேற்று ஒருசெர்மன்பட்டாளம் முழுதும் பணிந்துவிட்டது 24 மணிநேரம் லபாய்செல்லில் கடுஞ்சண்டைநடந்தது அவ்விடத்தை நமதுசேனைகள்பிடித்துக்கொண்டிருக்கின்றன நான்குசெர்மனியவிமானங்கள் அவர்கள்வரிசையில் கீழேவீழ்த்தப்பட்டன மேலும்மூன்றுவிமானங்கள் சேதமாக்கப்பட்டுத் தரைக்குக்கொண்டுவரப்பட்டது

7வ ஆங்கர்சோம்என்ற நதிகளுக்கிடையில் கைகலந்த சண்டைநடந்து 500 பேரைப்பிரித்தானியர் சிறைப்படுத்தினர் இதுவரையில் ஆறாயிரத்துக்கதிகமானோர் சிறைபிடிக்கப்பட்டனர் வேர்டனில் பிரான்சர் களைத்துப்போனதாய் செர்மனியர்எண்ணி தம் முதல்தரப்படைகளைப் பிரித்தானியபோர்முனைக்குக்கொண்டுபோயினர் செர்மனியரின் ஸ்தலங்களில் அதிபலமுள்ள லபாய்செல்என்றஇடத்தைப் பிரித்தானியர் பிடித்தநேரத்தைப் பிரான்சு புழுகின்றது மாமெட்ஸ் என்றஇடத்தைப்பிடிக்க இயலாதென்று சத்துருக்கள் நம்பியிருந்தனர் அதிலதிக பராக்கிரமங்காட்டிப் புதிய பிரித்தானியபடைகளின் பராக்கிரமமும் புகழப்படுகிறது

திப்வாலுக்கருகே நாம்இன்னும் முன்னேற்றமடைந்தோம் லாபாசிக் கால்வாய்க்குத்தெற்கேயுள்ள செர்மன்வரிசைமேல் நாம் விஷக்காற்றைப் பிரயோகித்தபின் அவர்களைத்தாக்கிப் பலனடைந்தோம் 40 செர்மனியர் சிறை பிடிக்கப்பட்டனர் ஹல்லக்குக்கு மேற்கிலுள்ள செர்மன் அரண்களை நமது காலாட்படை வகுப்பொன்றுதாக்கிப் பலனடைந்தது அச்சமயம் பலசெர்மனியர்கொல்லப்பட்டும் சிலர் சிறைப்பட்டும் போனார்கள் இதைச் செர்மனியரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்

7வ காலை அல்பேட்டுக்குக்கிழக்கே சத்துருக்களைப் பிரித்தானியர் உக்கிரமாய்த்தாக்கஆரம்பித்தார்கள் செர்மனியர் ஆங்கர்நதிக்கருகிலும் பிரிக்கோட்டுக்கு வடக்கிலும் நமதாலைத்தாக்கினார்கள் லபாய் செல்லாதிய இடங்களில் நமதுகாலாட்படை முக்கிய பலன்பெற்றது திப்வாலுக்குமேற்கே சத்துருக்கள் சிறிதுநேரம் ௨00 யார்தூரமான இடத்தை வசப்படுத்தியிருந்தார்கள் கண்ணீர்பெருகுங்குண்டுகளை எறிந்தார்கள் அதற்குக்கிழக்கே மிகுவேகத்துடன் கடினசண்டைநடந்தபின் ௧000 யார்தூரமுள்ள அரண்களடங்கிய போர்முனையை வசப்படுத்தினோம் நாம் சேப்சிக் என்னும் பலமான ஸ்தலத்தைத்தாக்கி ஒவிலாஸ ஸ்தலத்தைப்பிளந்து தள்ளிநுழைந்தோம் ௯00 யார்நீளமும் ௫00 யார்அகலமுமுள்ள போர்முனையில் முன்னேறிச் சத்துருக்களைப் பிரிக்கோட்டுக்குவடக்கிலுள்ள மூன்று அரண்களிலிருந்தும் இரண்டு காடுகளிலிருந்தும் அப்புறப்படுத்திவிட்டோம் ௨0 மாசமாய் அவர்வசமிருந்த சிப்சிக் பிடிக்கப்பட்டது மேற்கே நமதுபடை முதல்வரிசை அரணில் ௫00 யார்வரையில் உட்புகுந்து ஒவிலாஸ் என்னும் ஸ்தலத்தைச்சென்றடைந்தது சத்துருக்களில் ௭00 பேர் கண்டால்மெய்சனுக்குக் கிழக்கே சிறைப்படுத்தப்பட்டனர் நமதுகாலாட்படை கண்டால்மெய்சனைத்தாக்கியும் பின்தள்ளப்பட்டார்கள்

வேர்டன்சண்டை.

25வ மார்த்தோம்குன்றுக்குத்தெற்கே செர்மனியர்தாக்கியும் பிரான்சிய பீரங்கிப்பலத்தால் பின்தள்ளப்பட்டனர். தியாமாண்டுக்குமேற்கே இருக்கும் சிலஅரண்களைப் பிரான்சர் பிடித்தனர்.

27வ தியாமாண்டுக்குமேற்கே செர்மனியர்பின்தள்ளப்பட்டார்கள். பியூமினவுட் காட்டுக்கும் சீனுர்வுட்காட்டுக்கும் மத்தியிலுள்ள சத்துருஅரண்களில சிலபாகங்களை வசப்படுத்தினோம். சாபிலெவர்ட்டியிலிருக்கும் இரு சத்துரு பண்டசாலைகளை வெடிக்கச்செய்தோம்.

28வ செர்மனியர் திருப்பி எதிர்த்தும் நாம் பீரங்கிப்பிரயோகஞ்செய்து பின்தள்ளிவிட்டோம். தியாமாண்டில் கடுகடுப்பான சண்டைநடந்தது.

29வ மியுஸ்நதியின் இடக்கரையில சத்துருக்கள் கனத்தபீரங்கிகளால் தகர்த்துக்கொண்டிருந்தார்கள். நாம் அவர்கள்மேல் கனத்த பீரங்கிப்பிரயோகஞ்செய்து வெளிவிளம்பாமல் தடுத்துவிட்டோம். நாம் குண்டெறிந்துகொண்டு சத்துரு ஸ்தலங்கள்மேல் முன்னேற்றமடைந்தோம். சாம்பயினில் சில சிறிய ஸ்தலங்களைப் பிளந்துகொண்டு செர்மனியர் உட்புகுந்தும் அப்புறப்படுத்திவிட்டோம். தியாமாண்டுக்குவடக்கே செர்மனியர் நம்மைத்தாக்கியும் நாம் ஓயாமற் பீரங்கிப்பிரயோகஞ்செய்து மிகு சேதமுண்டாக்கி அவர்களைத் தடுத்துவிட்டோம்.

3 வ மியுஸ்நதியின் இடப்பக்கத்தில் செர்மனியர் உக்ர பீரங்கிப்பிரயோகஞ்செய்து தாக்கியும் பின்தள்ளப்பட்டார்கள்.

சத்துருக்கள் ஆவாகோர்ட்வுட்காட்டுக்கும் 304ம் குன்றுக்கும்மத்தியில் கனத்த பீரங்கிகளாலதகர்த்தும் விஷக்காற்றைப்பிரயோகித்துத்தாக்கியும் பின்தள்ளிவிட்டோம், நமது முதல்வரிசையில் ஓர் சிறிய அரண்ஸ்தானத்தைச் சத்துருக்கள்பிடித்தபடியத்தாலும் நாம் திறமையுடன்தாக்கி அதைக் கைப்பற்றிக்கொண்டோம்.

ஆடி 1வ தியாமாண்டைத்தாக்கி மறுபடி பிரான்சர் பிடித்துக்கொண்டனர். நாம் எவ்வளவு உக்கிர பீரங்கிப்பிரயோகஞ்செய்தபோதிலும் சத்துருக்கள் பலத்தால் நம்மை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்று ஓயாமல் தாக்கி [illegible]த்தும் பெருநட்டத்துடன் திரும்பிச்சென்றார்கள். பிறகு நம்மைத்தாக்கிக்கொண்டிருந்து பகல் 3 மணிக்கு நமதரண்களைப்பிளந்துட்புகுந்தார்கள். [illegible] னும் அப்புறப்படுத்தப்பட்டனர். அவ்விட[illegible] வசமாயிற்று.

29வ சாம்பயினில் நாம் சத்துருக்களை முதல்வரிசை அரணிலிருந்து அப்புறப்படுத்தி [illegible] இடங்களில் அவ்வரிசையைப்பிளந்துட்புகுந்து [illegible] ரண்டாம்வரிசைமட்டும் சென்று [illegible] இருப்பிடங்களை வெடிக்கச்செய்[illegible] நாம்

1வ தியாமாண்டில் [illegible] ப்பட்டு [illegible] வடித்த ஒருபாதுகாப்புஸ்தலத்தை மறுபடிபிடித்து 304ம் குன்றுக்குக்கிழக்கேயுள்ள அரண்களையும் பிடித்துக்கொண்டார்கள். ஆனால்நாம்திருப்பி எதிர்த்து அவர்கள் பிடித்த எல்லாவற்றையும் வசப்படுத்திக்கொண்டோம். மியுஸ்நதியின் வலப்புறத்தில் தியாமாண்டை வசப்படுத்த இருகட்சியாரும் வலுசண்டைசெய்து செர்மனியர்வலுவாய்த்தாக்கி அவ்விடத்தைப்பிளந்துபுகுந்தார்கள் நாம் அவ்விடத்துக்குப் போகுவழியிலும் சுற்றுப்பக்கங்களிலும் ஸ்திரமாய்ப்போய்ச் சேர்ந்திருக்கிறோம்

2வ தியாமாண்டில்நம்மைத்தாக்கச் செர்மனியர் பலமுறை எத்தனித்தும் பின்தள்ளப்பட்டனர்.

3வ பிரான்சிய ஆகாயப்படை சுறுசுறுப்பாய் வேலைசெய்து வேர்டனில் மூன்று புகைக்கூண்டுகளுக்குத் தீவைத்துவிட்டன. சேர்சென்ற்செய்ஞட் என்னும் ஆகாயவிமானி செர்மனியரின் 5 வது விமானத்தையும் கீழே வீழ்த்திவிட்டார். சனிக்கிழமையிரவு பிரான்சிய ஆகாயப்படை லாங்குயான் ஸ்டேசன்மேல் 48 குண்டுகளையும் தியான்வில் ஸ்டேசன்மேல் 8 குண்டுகளையும் பிரூல்ஸ் ஸ்டேசன்மேல் 16 குண்டுகளையும்எறிந்தன. ஞாயிற்றுக்கிழமை 12 பிரான்சுவிமானங்கள் அமாகனிலக்வி ஸ்டேசனில் 60 குண்டுகளை எறிந்தன. அதனால் கட்டிடங்கள் தகர்ந்தும் ரெயில்சாம்பிகளும் ஓர் வண்டித்தொடருஞ் சேதமாயிற்று. ஞாயிற்றுக்கிழமை செர்மனியர் நான்சிபெல்போர்ட்டென்னும் இடங்களைநோக்கிக் கனத்த குண்டுப்பிரயோகஞ்செய்தனர். காலை 3 மணிக்குச் சத்துருவிமானப்படை லுன்வில்நகர்மேல் குண்டுகளை எறிந்தது.

மேரியாகோட்டிலிருக்கும் காட்டிலிருந்து அல்சிவில்லர்சுக்குப் போகும் பாதைவரைக்குமுள்ள மூன்றேமுக்கால்மைல் தூரமுள்ள போர்முனையிலிருக்கும் செர்மனியரின் இரண்டாம்வரிசையில் இரண்டுவரிசை அரண்களை நாம் முற்றும்வசப்படுத்தினோம். சத்துருக்கள் பெலனும் அரண்படுத்தியிருந்த கேர்பிகோட் என்னும் ஸ்தலத்தை நாம் பிடித்துக்கொண்டோம், ஆர்சிவில்லாஸ கிராமத்திற்கு வடகேயும் மேற்கேயுமுள்ள எல்லைப்பிரதேசங்கள் நமதுவசத்திலிருக்கின்றன. எஸ்ட்ரீசுக்குவடக்கே இன்னுஞ் சிலரைச் சிறைப்படுத்திக் கனத்த பீரங்கிகளையும் பிடித்தோம், போர்முனையில் 39 செர்மன்பட்டாளங்களைக் கண்டுபிடித்தோம். அவைகளில் 31ம் அதிகம் சேதமுற்றுக் களைத்துபோயினவென்று சிறைப்பட்டோர் சொல்லுகிறார்கள். மியுஸ்நதியின் வலப்பக்கத்தில் சத்துருக்கள் பீரங்கிகளால் தகர்த்து டாம்லுப்பைப் பிடித்தும் அவர்களை முழுதும் அப்புறப்படுத்திவிட்டோம். நமது விமானிகள் செர்மன் விமானங்களிலிருந்த புகைக்கூண்டுகள் 13ன் மேல் பீரங்கிப்பிரயோகஞ்செய்தனர், சத்துருவிமானங்களில் 9 தான் காணப்பட்டன. அவைகளிலொன்றும் நமதுவரிசையைக் கடந்துசெல்லவில்லை. ஒரு விமானம் மாத்திரம் சேதமாக்கப்பட்டது.

4வ சோம்நதிக்குத்தெற்கே மேரிகோர்ட்டுக்கருகிலிருக்கும் காட்டுக்குக்கிழக்கே சாயிடர்வுட் என்னுங்காட்டையும் பியூலியர்கிராமத்தையும் பிடித்து இன்னுந்தெற்கே சத்துருவின் பாதுகாப்பு ஸ்தலமான ஆஸ்சிவில்லேஸ என்னும் ஸ்தலத்துக்குத்தெற்கே செர்மன் 2ம் ஸ்தலத்தை வசப்படுத்திஅப்பாற்சென்றோம். பஸகோட் பிளான்கோட் என்ற ஸ்தலங்களையும் பிடித்துக்கொண்டோம். இப்பகுதியில் நாம்பிடித்த ஸ்தலம் மூன்றேஅரைக்கால்மைல் விஸ்தாரமுள்ளது. காயமற்ற சிறையாளர் இதுவரையில் 8000 பேருக்குமேலிருக்கிறார்கள், 3 கனத்தபீரங்கிகளுட்பட எழு பீரங்கிகளைப் பிடித்திருக்கிறோம். இதுதவிர கேஸமேட்ஸ் என்னுமிடத்தில்வைத்திருக்கும் மெசின்பீரங்கிகளும் அரண்பீரங்கிகளும் கணக்கிற்சேர்க்கப்படவில்லை. தியாமாண்டு முதலிய இடங்கள் பீரங்கிகளால் தாக்கப்பட்டன.

5வ சோம்நதிக்குத்தெற்கே பிரான்சர் காடுகளையும் காடுகளையும் பல கைதிகளையும் பிடித்துக்கொண்டு முன்னேறுகிறார்கள் பெல்லாய்என்னுங் கிராமத்தையும் எஸ்ரிடீஸ என்னுமிடத்தில் சில வீடுகள்தவிர மிகுதி இடங்களையும் பிடித்துக்கொண்டனர் அவ்விடத்தில் 500 பேர் சிறைபிடிக்கப்பட்டனர் மியுஸ்நதியின் வலப்புறத்திலிருந்த செர்மனியர் முன்னிலும் இருமடங்காய் நம்மைத்தாக்கியும் பின்தள்ளப்பட்டனர் பகல் இரண்டுமணிக்குப் பெரியசேனையைக்கொண்டுவந்து நான்காம்முறையாகத் தியாமாண்டை மறுபடி பிடித்துக்கொண்டார்கள் நாம் அதற்கு அருகிலிருக்கிறோம் அதன் போக்குவரத்து இடமும் நமதுவசமிருக்கிறது

டான்ஆப் லாபீ என்னுமிடத்திலிருக்கும் பீரங்கிப்படைகளைச் செர்மனியர் உக்கிரமாய்த் தகர்க்கிறார்கள்

நாம்பிடித்துப் பலப்படுத்தியஸ்தலங்களைச் செர்மனியர் திருப்பிஎதிர்க்க எத்தனித்தார்கள் இரண்டு கனத்தபீரங்கிப்படைகளுட்பட வேறு மூன்று பீரங்கிப்படைகளும் பிடிக்கப்பட்டன ஒரு அரணில்மாத்திரம் சத்துருக்களின் 40 உடல்கள் காணப்பட்டன ஆவர்நதிக்கும் எய்சர்நதிக்கும்மத்தியில் நமது வேவுதியும்படை சத்துரு முதல்வரிசை அரணைப்பிளந்துட்புகுந்து இலைசிறைசெய்துகொண்டுவந்தன

நாம் இரவில் பியூமினவுட் காட்டுக்குத்தென்கிழக்கே முன்னேறி டாம்லூப்புக்கு வடமேற்கேயிருக்கும் அரணில் ஒருபாகத்தைப்பிடித்தோம்

5வ பிரான்சர் பிரோனுக்குச்சமீபத்திலிருக்கின்றனர் அவ்விடத்தில் செர்மனியர் ஒருபாகத்தைக் கட்டுக்காவல்செய்கிறார்கள் பிரித்தானிய பிரான்சியர்சேர்ந்து தாக்கியதின்பலனாய் 19 கிராமங்களையும் 8500 போர்வீரரையும் 10 பீரங்கிப்படைகளையும் அநேக மெசின்பீரங்கிகளையும் அநேக மாட்டார்பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டார்கள் சேர்ந்த சேதம் சொற்பம் பீரங்கிப்பிரயோகத்திலேயே பலனடைந்தனர்

5வ காயப்படாதவர்களாய் 9000 பேரைச் சிறைப்படுத்தினோம் ஒரு பிரான்சியபடைமாத்திரம் 60 பீரங்கிகளைப் பிடித்திருக்கிறது மிகுதிக்கணக்குத்தெரியவில்லை குர்லுக்கருகில் செர்மனிய அரண்களை நாம்பிடித்துக்கொண்டோம் [illegible] என்னும்மூரையும் பிடித்தோம் 636ம் குன்றுக்குத் தெற்கிலுள்ள பிரதேசம் நமதுவசமாயிருக்கிறது பெல்லாயில் அநேகரைச் சத்துருக்கள் பிடித்துக்கொண்டனர் ஆயினும் உடனே அப்புறப்படுத்திவிட்டோம்

6வ குர்லுக்குக்கிழக்கே செர்மனியரின்போர்முனையில்ஒன்றேகால்மைல் தூரம்பிடித்துவிட்டோம் ஹைடிரேஸ் என்னுமிடத்திலிருந்து செர்மனியரை முற்றும் வெளிப்படுத்திவிட்டோம சோம்நதிக்குத்தெற்கில் செர்மனியரின் இரண்டாம் ஸ்தலம் இப்போது நம்வசமிருக்கிறது அது 6 மைல் நீளமுள்ளது இன்னும் 500 பேர்சிறைபிடிக்கப்பட்டனர் 70 பீரங்கிகளையும் நூற்றுக்கணக்கான மெசின்பீரங்கிகளையும் நாம்பிடித்தோம் சோம்நதிக்கு வடக்கே சிலஇடங்களிற் சண்டைநடந்தது ஹேமுசுக்குவடக்கே ஒருமைல்தூரத்தில் தாக்கிச் செர்மனியர் இரண்டுசிறியகாடுகளைப்பிடித்தனர் அதற்கு அருகிலுள்ள காடொன்றை நாம் பிடித்தோம்

8வ சோம்நதிக்கரையில் விசேஷமில்லை மியுஸ்நதியின் வலப்பக்கக்கரையில் கடுஞ்சண்டைநடக்கிறது தியாமாண்டிலிருக்கும் நமது ஸ்தலங்களைச் செர்மனியர்தாக்கி முன்பாகத்திருக்கும் அரணில் கொஞ்சம் வசப்படுத்தினர் ஆனால் திருப்பி எதிர்த்து முழுஅரணையும் வசப்படுத்திக்கொண்டோம் ஸௌவில் என்னுங் கோட்டைக்குவடக்கே உக்கிரமான பீரங்கிச்சண்டை நடக்கிறது

ருசிய செர்மனிய ஆஸ்திரியயுத்தம்.

25வ ருசியர் சத்துருக்களுடன் உக்கிரயுத்தஞ்செய்து 2000 கைதிகளுடன் கிம்போலங்காவைப் பிடித்தனர். இத்துடன்புகோவினுமாகாணம்முழுதும் ருசியர்வசமாயிற்று.

26வ டுவைனாவில் ருசியர் செர்மனியரைப்பின்தள்ளி சிர்டோரிஸ்க் என்னுமிடத்துக்கருகில் ஸடிர்நதிக்கரையிலிருக்கும் ஒருகோட்டையை இரண்டு கனத்தபீரங்கிகளுடன் பிடித்துக்கொண்டார்கள். ருசியர் அக்கோட்டைக்குள்ளிருந்தவர்களை ஈட்டிகளாற் குத்தினர்.

ஸவினியுஸ்கிக்குத் தென்கிழக்கே சத்துருக்கள் ருசியவரைத்தாக்கி அவர்களின் சிலஅரண்களைச்சேர்ந்தும் முற்றும்பின்னிட்டுப்போய்விட்டனர். 800 பேர் கைதிகளாகப் பிடிக்கப்பட்டனர். அவருள் அரைவாசிக்குமேற்பட்டோர் செர்மனியர். அவ்வரண்கள் சத்துருப்பிணங்களால் நிறைந்திருந்தன. ருசியர் ராடசிவிலாப்புக்கு வடக்கேயிருக்கும் சத்துரு முதல்வரிசை அரணைப்பிளந்துட்புகுந்தார்கள். சத்துருக்கள்அவசரமாய்ப்பின்னிட்டோடியதால் திரளானசாமான்கள்ருசியர்கைப்பட்டன

கோசாக்கியர் புசாசிடாலுக்குத்தெற்கே நதியைக்கடந்து 350 கைதிகளைப்பிடித்தனர். நாம் நிரான்சில் வெளியாக்கணமாய்க்கருகில் நெருங்கிக்கொண்டிருக்கிறோமென்று ருசியஅறிக்கை கூறுகிறது.

28வ சத்துருக்கள் லிப்ஸ் என்னுமிடத்துக்கருகில் ஷாராநதியைக்கடந்துசெல்வதில் சொற்பநேரம் பலனடைந்தார்கள். ஆனால் திருப்பி எதிர்க்கப்பட்டுப் பின்தள்ளப்பட்டார்கள். டைரோபைச் சத்துருக்கள் பீரங்கிகளால்தாக்குகிறார்கள். ருசியர் டுபோனோடைன் என்னும்நதிக்குச் சத்துருக்களைப் பின்னிட்டுச்செல்லும்படிசெய்தார்கள்.

ஆனிமீ 4வ முதல் 28வ வரையில் ருசியர் 4031 உத்தியோகஸ்தரையும் 194041 மனிதரையும் 219 பீரங்கிகளையும் 644 மெசின்பீரங்கிகளையும் 196 மாட்டர்பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டார்கள்.

பல கைதிகளுட்பட லட்சம்பேர் கோலவ் என்னுமிடத்திலிருந்து 10 மைல் தூரத்துக்குமேலுள்ள பாதுகாப்பு ஸ்தலங்களை வெகுவிரைவாக அரண்படுத்துகின்றனர். கோசாக்கியர் பக்சாசக்குத் தென்மேற்கே நீடர்நதியைக்கடந்துசென்றதினால் கொலோமியாவில் சத்துருக்களின்நிலைமை இன்னும் நெருக்கடியாய்விட்டது.

29வ ரீக்காவுக்குத்தென்கிழக்கே திங்கட்கிழமை செர்மனியர் உக்கிரபீரங்கிப்பிரயோகஞ்செய்தும் விஷக்காற்றைப்பிரயோகித்தும் பெரியசேனையைக்கூட்டி நம்மைப் புக்கான என்னும் ஸ்தலத்தைநோக்கித் தாக்கினர். ஆனால் அச்சமயத்தில துணைப்படைபெற்றுச் சத்துருக்களை எதிர்த்து மிகு சேதம்விளைத்துப் பின்தள்ளிவிட்டோம்.

புகோவினாவில் நாம் முன்னேறுவதைத்தடுக்கப் பிரயாசப்படுகின்றனர். பாலங்கட்டுநிரைகளைத் தாக்கினாலும் அவர்கள் தம்வேலையைச் செய்துகொண்டேயிருக்கிறார்கள்.

30வ சத்துருக்கள் எவ்வளவு துணிவுடனெதிர்த்தும் ஜெனறல் லெசிட்ஸ்கியென்னும் ருசியசேனாபதி நீஸ்டர்நதிக்கும் புருத்நதிக்கும் மத்தியில் சத்துருக்களைக் கடுமையாய்த்தாக்கி அவர்கள் அரணில் மூன்றுவரிசைகளைப்பிடித்து மிகுசேதமுண்டாக்கி 10506 கைதிகளையும் அநேக பீரங்கிகளையும் வசப்படுத்திக்கொண்டார்.

29வ சேற்று ருசியர் போர்முனையில் 221 உத்தியோகஸ்தரையும் 10285 மனிதரையும் கைதிகளாய்ப் பிடித்தனர்.

ஆடி 1வ சுவீடன் கரைக்கப்பாற்கடற்பகுதிச் சண்டைநடந்து வடபாகத்திலிருந்து டிஸ்ட்ரோயர்க கப்பற்படை வெகுவாய் ருசியகப்பற்படை [illegible] ரிய யுத்தகப்பற்படையின்முன் பின்வாங்கிசென்றதென்று ஓர்கப்பல் தெரிவித்தது.

வியாழக்கிழமை இரவு நமது டார்பிடோப்படகுகள் ஆயுதம்பூண்ட ஓர் ருசியகுருசர்க்கப்பலையும் 5டிஸ்ட்ரோயர்க்கப்பல்களையுந்தாக்கின. ருசியர் கொஞ்சநேரச் சண்டையின்பின் திரும்பிப்போயினர். அவர்கள் கனத்த பீரங்கிகளால் தகர்த்தும் நமக்குச் சேதமில்லை என்று செர்மனிய அறிக்கை கூறுகிறது.

1வ புகோவினாவில் முக்கிய புகைரத ஸ்டேசனுள்ள கொலோமியாநகரை ருசியா பிடித்துக்கொண்டனர்.

பின்னிட்டுச்செல்லும் ஆஸ்திரியர் முன் ஆயத்தஞ்செய்துவைத்த ஸ்தலங்களிற்போய்ச்சேருகிறார்கள். அவர்கள் பெரியசேனையைக்கூட்டிக் கிம்போலங்குக்கு வடகிழக்கே நம்மை வலுவிலதாக்க எத்தனித்தனர். ஜெனறல் லெசிட்ஸகி என்பவரின்கீழிருக்கும் சேனைகள் மிகக்கஷ்டமானசமயங்களில் வேலைசெய்து சத்துரு எதிர்ப்புக்களைத் தாங்கிக்கொண்டிருக்கின்றன. மழைபெய்து றோட்டெல்லாஞ் சேதமாயின. ருசியர் பிடித்த கைதிகள் இப்போது 212000 பேர்களிருக்கிறார்கள். நாம் நீஸ்டர்நதிக்குத்தெற்கே சத்துருக்களைப்பின்தொடர்ந்து சென்றுகொண்டிருக்கும்போதும் ஆஸ்திரியர் சாமான்களையெல்லாம் விட்டுவிட்டுத் தங்க[illegible]

டைந்தவர்களாய் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் யுத்த சாமானகளும் கைதிகளும் ஒபெர்டின்நகரில் வந்து ஏராளமாய்க்குவிந்துகொண்டிருக்கின்றன சுற்றுப்பக்கத்திலிருக்கும் கிராமங்கள் பிடிக்கப்பட்டன

சத்துருவிமானிகள் லட்ஸ்கில் 30 குண்டுகளை எறிந்தார்கள் சத்துருக்கள் ரீகாவில் தென்கிழக்கிலிருக்கும் நமது ஸ்தலங்களைப் பீரங்கிகளால் தகர்த்து இல்லக்ஸ்ட் என்னுமிடத்திற்கு வடக்கே முன்செல்ல எத்தனித்தும் பின்தள்ளப்பட்டார்கள் [illegible]கோவிரோடக்குக்கு வடகிழக்கே செர்மனியர் உக்கிரமாய்த் தகர்த்து நீமன்நதியைத் தாண்டிச்சென்று ஒருகாட்டைப் பிடித்துக்கொண்டார்கள்

பால்டிக்க விலிருந்த கப்பற்சண்டையில் செர்மனியர் பின்னடைந்துசெல்லும்படி செய்யப்பட்டார்களென்று ருசியர் சொல்லுகின்றனர்

2உ ஆனிமீ 4உ முதல் 30உ வரையில் ருசியர் 217,000 கைதிகளைப் பிடித்தார்கள்

3உ ஜெனரல் லெசிட்ஸ்கி என்னுஞ்சேனபதி கொலோமியாவுக்கு மேற்கேயிருக்கும் ஸ்தலங்களையும் 2000 கைதிகளையும்பிடித்தார் கைதிகளிற் பெரும்பாலார் குடிவெறியால் வீழ்ந்துகிடந்தனர்

சத்துருக்கள் பின்ஸக்குக்கு 50 மைல் வடக்கிலுள்ள ஷாராநதியைக்கடக்க எத்தனித்தும் பின்தள்ளப்பட்டனர் ஆஸ்திரியர் லட்ஸ்கில் தாக்க எத்தனித்துந் தடுக்கப்பட்டார்கள்

செர்மனியர் ஒருவாரகாலமாய் அநேகரைப்பலிகொடுத்து ருசியரைத்தாக்கி ஸடிர்நதிக்குக்கிழக்கே சில பிரதேசங்களில் 5 மைல்தூரம்வரையில் முன்னேற்றமடைந்திருக்கின்றனர் ஆனால் புகோவினவழியாக ஜெனரல் லெசிட்ஸ்கி என்னும் ருசியச்சேனபதி சேனையைச் சூழ்ந்துகொண்டுவருகிறவரையும் ருசியர் சத்துருக்களைத்தடுத்து நிறுத்திக்கொண்டிருப்பார்களென நம்பப்படுகிறது ருசியர் கொலோமியாவுக்குமேற்கே 15 மைல்தூரம் முன்சென்றிருக்கிறார்கள் ஆஸ்திரியர் கார்ப்பேதியன்பகுதியைப்போக்கிப் பின்னிடுவதற்கு அவர்கள் நிலைமை நெருக்கடியாயிருக்கிறது

4உ ரீகாவிலிருந்து காக்கஸ் வரைக்குமுள்ள போர்முனை முழுதும் கடுஞ்சண்டை நடக்கிறது ருசியர் 2300 பேரையும் பல பீரங்கிகளையும் பிடித்துக்கொண்டனர்

ருசியர் குதிரைப்படைகளைத் திறமையுடன் உபயோகித்ததினால் லட்சக்குக் கொரோசேரிக்கும் மத்தியில் அரைவாசித்தூரம்வரை அவர்கள்நிலைமை காப்பாற்றப்பட்டது சத்துருக்களுக்குத் துணைப்படைவந்தபின் ருசியரை நெருக்கிக்கொண்டிருந்தார்கள் அத்தருணம் ருசியகுதிரைப்படை கூட்டங்கூட்டமாய்வந்து சத்துருப் பக்கப்படையைத்தாக்கி அதைப்பின்னிட்டோடும்படிசெய்து அவர்களுக்கு மிகு சேதம்விளைத்தது பின்பு ருசிய காலாட்படை முன்செல்ல ஆரம்பித்து 800 பேரைச் சிறைபிடித்துக்கொண்டது ஆஸ்திரியர் கூட்டமாய்ச்சேர்ந்து கிஸெலின் ஸ்தலத்திலுமுன்னேறிவந்து எத்தனைமுறை தாக்கினார்களோ அத்தனைமுறையுஞ் சேதத்துடன்பின்தள்ளப்பட்டனர் ஸமார்க்ஸனுக்குத்தெற்கே செர்மனியரின் அரண்களைப்பிடித்தும் அப்புறப்படுத்தப்பட்டார்கள் [illegible]பகுதியில் சத்துரு ஸ்தலங்களைத் தகர்ப்பதில் ருசிய பீரங்கிப்படையுடன் கப்பற்படையுஞ் சேர்ந்துகொண்டது

